**<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**இ.ம.எண்.337/2024 in இ.ம.எண்.410/2014 in அ.வ.எண். 287/2012**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – நீ.ம.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | கந்தசாமி | தொழில் | : | வழக்கறிஞர் |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் சாட்சியம்.

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பல்லடம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்கிறேன். அ.வ.எண்.287/2012 வழக்கில் இ.ம.எண்.410/2014 என்ற மனுவில் என்னை இந்நீதிமன்றம் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையராக நியமித்தது பணிப்பாணை பிறப்பித்தது. அதன் படி நான் கடந்த 27.02.2021ம் தேதியிலும், 12.08.2023 தேதியிலும், மனு சொத்தினை வட்ட சார் ஆய்வாளர் சர்வே துறை பல்லடம் அவர்கள் துணையுடன் பார்வையிட்டு வருவாய் ஆவணங்களின் படியும், உரிமைமூல ஆவணங்களின் படியும், பணிப்பாணை சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை அளவீடு செய்து சர்வேயர் 2 வரைபடங்களுடனும், எனது தோராய வரைபடத்துடனும், எனது அறிக்கையை கடந்த 09.01.2024 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (**நீதிமன்ற ஆணையர் அறிக்கை, வரைபடம், மற்றும் நிலஅளவையரின் வரைபடங்கள் 2 ஆகியவை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**.)

2. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த அறிக்கை சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு கடந்த 13.03.2025 அன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை கடந்த 12.03.2025 அன்று மாலை சார்வு செய்யப்பட்டது. எனக்கு

போதிய கால அவகாசம் கோப்பிணை பார்வையிட இல்லாததால் நான் இன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதாக உறுதி அளித்தேன். அதன் படி இன்று சாட்சியம் அளிக்கின்றேன்.

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு வழங்கப்பட்ட பணிப்பாணையில் எ அட்டவணை அயிட்டம் 2 சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்தான 34 சென்ட் விஸ்தீரணம் உள்ள பகுதியை பற்றி எனது அறிக்கையில் எங்க குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் தனித்து குறிப்பிடவில்லை. பணிப்பாணையில் எ அட்டவணை அயிட்டம் 2 66 ல் கிழபுறமாக என்று சொல்லியுள்ளது எது என்றால் எனக்கு தெரியாது.

2. பணிப்பாணையில் எ அட்டவணை அயிட்டம் 2 மேல்புற ஓரமாக தென் வடல் நீளியாக 0.56 ஏக்கர் இன்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 0.56 ஏக்கர் எங்கு உள்ளது என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 551 காலையில் மேல்புறமாக 551/3 காலையில் 23 செண்டும், 551/2 காலையில் 19 3/4 செண்டும், 551/1 காலையில் 11 செண்டும் உள்ளதாக எனது அறிக்கையில் பத்தி 10 ல் சொல்லியுள்ளேன்.

3. ஏன் 56 செண்டை தனித்தனியாக காட்டியுள்னேன் என்றால் நான் அளவீடு செய்த போது க.ச.551/3 காலையில் மனுதார் சுவாதீனத்தில் பு.ஏ.4.56 1/4 லும், சர்வேயர் முதல் வரைபடத்தில் மஞ்சள் வர்ணத்தில் தென்வடலாக காண்பிக்ககூடிய பகுதி தடமாகவும், அதற்கு மேற்புறம் 2 ம் எதிர்மனுதாரர் பூமியும், அமைந்திருந்ததால் அவ்வாறு பிரித்து காண்பிக்கப்பட்டது. வருவாய் ஆவணத்தில் காணக்கூடிய 551/2 தடம் நடைமுறையில் உள்ள தடத்தில் இருந்து மேல்புறமாக உள்ளது. நடைமுறையில் தென்வடல் தடமான ஒரு தடம் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி தென்வடல் தடமானது 1, 2 எதிர்மனுதாரர்களின் பூமிக்கு கிழபுறமாகவும், மனுதாரர் பூமிக்கு மேல்புறமாகவும் தென்வடல் நீளியாக உள்ளது என்றால் சரிதான். நடைமுறையில் இருக்கும் தடத்திற்கு மேற்புறம் 1, 2 எதிர்மனுதாரர்களும், கிழபுறம் மனுதாரரும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மனுதாரருடைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் தடத்திற்கு கிழபுறமாக மனுதாரர் பூமி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நில அளவையர் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தான் அளந்தார் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும், நடைமுறையில் சுவாதீனத்தில் உள்ளவாறும் மனுதாரரின் உரிமை மூல அடிப்படையிலும், அளந்து காட்டியுள்ளார். நில அளவையர் தனது முதல் வரைபடத்தில் நடைமுறையில் உள்ள தடத்தை மஞ்சள் நிறத்திலும், வருவாய் ஆவணங்களின் படி உள்ள தடத்தை 551/2 என்று தடத்திற்கு நிறம் கொடுக்காமல் காட்டியுள்ளார்.

6. 551/2 என்று தடத்திற்கு நிறம் கொடுக்காமல் காட்டியுள்ள பகுதி 2 வது எதிர்மனுதாரின் விவசாய பூமி என்றால் சரிதான். 40 அடி உயர தென்னை மரங்கள் உள்ளன. மனுதாரரின் பூமியிலும் தென்னை மரங்கள் உள்ளது. மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தடத்தினை தான் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். தென்வடல் தடமானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் பூமிகளையும் தாண்டி வடக்கே 3ம் நபர்களின் பூமிகளுக்கு செல்கிறது என்றால் சரிதான்.

7. மனுதாரரின் பூமியில் இருந்து தென்வடல் தடத்தின் தெற்கோட்டில் கிழபுறம் 3 முதல் 4 அடிகள் கீழே தாழ்வாக உள்ளது என்றால் சரிதான். வடக்கே செல்ல செல்ல உயரம் குறைந்து சமதளமாக ஆகின்றது. 1, 2 எதிர்மனுதாரர்கள் பூமியானது மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை தடத்தின் மேல்புறம் 1 முதல் 2 அடிகள் கீழே தாழ்வாக உள்ளது என்றால் சரிதான். மஞ்சள் நிறத்தில் சொல்லப்பட்டுள்ள தடத்தின் மேல்புறம் 1ம் எதிர்மனுதாரரின் பூமியின் வடகோட்டில் கிழபுற பகுதியில் பி.ஏ.பி வாய்க்காலில் இருந்து தண்ணீர் வருவதற்காக கல் வாய்க்கால் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

8. மனுதாரர் ஆவணத்தில் தென்வடல் தடத்திற்கு மேல்புறம் பூமி இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. இருதரப்பு ஆவணங்களையும் படித்து பார்த்து தான் அளவீடு செய்யப்பட்டது என்றால் வாங்கிப்பார்த்து பணிப்பாணையின் படி அளவீடு செய்யப்பட்டது. தென்வடல் தடத்திற்கு மேலபுறமாக மனுதாரர் பூமியே கிடையாது என்றால் அறிக்கை மற்றும் வரைபடங்கள் மனுதாரருக்கு சாதகமாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே எனது அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பணிப்பாணை சொத்து

விவரத்திலும், தாவா சொத்து விவரத்திலும் தடம் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு கொடுக்கப்பட்ட பணிப்பாணையின் படிதான் பூமிகளை அளவீடு செய்தேன் என்றால் சரிதான். நான் அளவீடு செய்த போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் தரப்பினர்கள் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். நில அளவை செய்து அத்துக்கற்களை சரிபார்த்து தான் அளவீடு செய்தேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.21 18:21:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.